# மே – 10 – வியாழன்

## புனித அப்தோனினுஸ்

**உலகெங்கும் வாழ்வோரே! அனைவரும் ஆண்டவரை ஆர்ப்பரித்துப் பாடுங்கள்!**
**திபா. 98:4**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 18 : 1 - 8

இவற்றுக்குப் பின்பு பவுல் ஏதென்சை விட்டுக் கொரிந்துக்குப் போய்ச் சேர்ந்தார்.அங்கே போந்துப் பகுதியில் பிறந்த அக்கிலா என்னும் பெயருடைய ஒரு யூதரையும் அவர் மனைவி பிரிஸ்கில்லாவையும் கண்டு அவர்களிடம் சென்றார். அவர்கள், "யூதர் அனைவரும் உரோமை நகரத்தை விட்டு வெளியேற வேண்டும்" என்ற கிலவுதியு பேரரசருடைய கட்டளைக்கு இணங்கி இத்தாலிய நாட்டைவிட்டு அண்மையில் அங்கு வந்திருந்தார்கள். கூடாரம் செய்வது அவர்களது தொழில். தாமும் அதே தொழிலைச் செய்பவராதலால் பவுல் அவர்களிடம் தங்கி வேலை செய்துவந்தார். ஒவ்வொரு ஓய்வுநாளும் அவர் தொழுகைக் கூடத்தில் யூதரிடமும் கிரேக்கரிடமும் பேசி அவர்கள் நம்பிக்கை கொள்ளச் செய்தார். சீலாவும் திமொத்தேயுவும் மாசிதோனியாவிலிருந்து வந்தபோது பவுல் இறைவாக்கை அறிவிப்பதில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தார் "இயேசுவே மெசியா என்று யூதரிடம் சான்று பகர்ந்துவந்தார்.அவர்கள் அதனை எதிர்த்துப் பழித்துரைத்தப்போது அவர் தமது மேலுடையிலிருந்த தூசியை உதறி, "உங்கள் அழிவுக்கு நீங்களே பொறுப்பு, நான் அல்ல. இனிமேல் நான் பிற இனத்தாரிடம் செல்கிறேன்" என்று கூறினார். அவ்விடத்தை விட்டுவிட்டுக் கடவுளை வழிபடும் தீத்து யுஸ்து என்னும் பெயருடைய ஒருவரின் வீட்டுக்குப் போனார். அவரது வீடு தொழுகைக் கூடத்தை அடுத்து இருந்தது. தொழுகைக்கூடத் தலைவரான கிறிஸ்பு என்பவர் தம் வீட்டார் அனைவரோடும் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டார். கொரிந்தியருள் பலரும் பவுல் கூறிய வற்றைக் கேட்டு கொண்டு திருமுழுக்குப் பெற்றனர்.

**பதில்பாடல் :** பிற இனத்தார் முன் ஆண்டவர் தம் நீதியை நிலைநாட்டுகிறார்.

## நற்செய்தி : யோவான்16 : 16 - 20

அக்காலத்தில் இயேசு தம்சீடரை நோக்கிக் கூறியதாவது:இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள் மீண்டும் சிறிது காலத்தில் என்னைக் காண்பீர்கள்."அவருடைய சீடருள் சிலர், ""இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள் மீண்டும் சிறிது காலத்தில் என்னைக் காண்பீர்கள்" என்றும் "நான் தந்தையிடம் செல்கிறேன்" என்றும் சொல்லுவதன் பொருள் என்ன?" என்று தங்களிடையே பேசிக்கொண்டனர்."இந்தச் "சிறிது காலம்" என்பது என்ன? அவர் பேசுவது நமக்குப் புரியவில்லையே" என்றும் பேசிக்கொண்டனர். அவர்கள் தம்மிடம் கேள்வி கேட்க விரும்பவதை அறிந்த இயேசு அவர்களிடம் கூறியது "இன்னும் சிறிதுகாலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள் மீண்டும் சிறிதுகாலத்தில் என்னைக் காண்பீர்கள்" என்று நான் சொன்னதைப்பற்றி உங்களிடையே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள் அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள் ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் வழியாக ஆண்டவர் இயேசு தன்னுடைய வாழ்வைப் பற்றி எடுத்துரைக்கின்றார். இன்னும் சிறிது காலத்தில்" நீங்கள் என்னைக்காண மாட்டீர்கள், என்பது இயேசு தான் விரைவில் இறக்கப்போவதை சுட்டிக்காட்டுவதாகவும் மீண்டும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக்காண்பீர்கள், உயிர்ப்புக்குப் பின்பு தான் சீடர்களுக்குத் தோன்றுவதைச் சுட்டிக்காட்டுவதாகவும் இருக்கிறது. அதே வேளையில் சிறிது காலத்தில் காண மாட்டீர்கள், மீண்டும் காண்பீர்கள் "என்ற இயேசுவின் கூற்று ஆழமான ஆன்மீக உண்மையையும் நமக்கு எடுத்துரைக்கின்றது. இறைவனோடு நெருக்கமான உறவு கொண்டு வாழ்ந்த பல புனிதர்கள், தங்களுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு என்பது கண்ணாமூச்சி விளையாட்டு என்கின்றனர். அதாவது ஒரு சில நேரங்களில் இறைவன் தங்களோடு இருந்து தங்களுக்கு ஆற்றலும் வலுவும் ஊட்டுவதைத் தெளிவாக உணர்கின்றனர். இன்னும் சில நேரங்களிலோ அதே இறைவனின் பிரசன்னம் தங்களிடம் இல்லாத்தைப்போல் உணர்கின்றனர். எவ்வளவு தான் செபித்தாலும் இறைவனுக்காக ஏக்கம் கொண்டாலும் இறைவன் தன்னை இவர்களுக்கு வெளிப்படுத்துவதில்லை. இது தாங்க முடியாத சோகத்தையும் வேதனையையும் இவர்களில் ஏற்படுத்துகின்றது. இப்படிப்பட்ட சோதனைக்காலக்கட்டத்திற்கு பின்பு, மீண்டும் இறைவனது பிரசன்னத்தை உணரும்போது தங்கள் சோகம் மறைந்து மகிழ்ச்சி பல மடங்காக பெருகுவதை அனுபவிக்கின்றார்கள். இதை உணர்ந்தவர்களாக நாமும் எப்பொழுதும் இறை அருள் பெற்று வாழுவோம்.